# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2155/15 - 2019 දෙසැම්බර් මස 26 වැනි බ්‍රහස්පතින්දා - 2019.12.26

*2155/15 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 26 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச.வ.பி. 123/48* (iv)

**(105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டம்**

*(105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 19(உ) என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 72 ஆம் பிரிவின் கீழ் இலங்கை மருத்துவப் பேரவையின் கலந்தாலோசனையுடனும் மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் பதிவுசெய்தலைப் பெற்றுக்கொள்வதற்கு ஆளொருவரை உரித்துடையவராக்குகின்ற ஏதேனும் தகைமையை வழங்குகின்ற அல்லது அளிக்கின்ற ஒவ்வொரு பல்கலைக்கழகத்தின் அல்லது நிறுவனத்தின் விமர்சனங்களைக் கருத்திற்கெடுத்ததன் மேல் சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

பவித்திராதேவி வன்னிஆராச்சி,
*சுகாதார மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சர்.*

கொழும்பு,
*2019, திசெம்பர் 20.*

ஒழுங்குவிதிகள்

*2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 26 ஆந் திகதிய 2055/54 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2018 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க மருத்துவ (குறைந்தபட்ச நியமங்களைப் பேணுதல்) ஒழுங்குவிதிகள் அதன் 8(இ) ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் திருத்தப்படுகின்றது :-*

*"(இ) பல்கலைக்கழகத்திற்கு அல்லது நிறுவனத்திற்கு அனுமதிக்கப்படும் மாணவர் ஒவ்வொருவரும் உயிரியல், இரசாயனவியல் மற்றும் பௌதீகவியல் பாடங்களில், இத்தகைய பாடங்களின் சேர்மானத்தில் இரண்டு திறமைச் சித்திகளும் அத்துடன் ஒரு சாதாரண சித்தியிலுமான குறைந்தபட்ச தராதரங்களுடன் ஒரு தடவையிலும் அதே தடவையிலும் இலங்கை கல்விப் பொதுத் தராதரப் (உயர்தரப்) பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.".*

*01-336*


1A - PG 4835 — 517 (2019/12) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.